(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**.262/2022 அ.சா.15

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுந்தரபாண்டியன் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 08.10.2025.

முதல் விசாரணை:-

நான் தற்போது அச்சம்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோச்சடை குருப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். 2019ம் வருடம் மே மாதம் மேல் மதுரை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 09.05.2019ம் தேதி தெற்குவாசல் காவல் நிலையத்திலிருந்து காலை சுமார் 11.00 மணியளவில் போன் மூலம் தெற்கு வாசல் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். நானும் கிராம உதவியாளர் சமயனும் மாலை சுமார் 4.00 மணியளவில் தெற்கு வாசல் காவல்நிலையம் போனோம். அப்போது எதிரி பிரபாகரன் என்பவர் இருந்தார் (அதற்கு முன் அவரை பார்த்ததில்லை என்றும், அதன்பின் ஒரு நாள் பார்த்ததாகவும், அதனால் தற்போது அவரை நீதிமன்றத்தில் அடையாளம் காட்ட இயலவில்லை என்று சாட்சி கூறுகிறார்.) மேலும் 3 பேர்

அங்கிருந்தார்கள். (அவர்களையும் அன்று ஒரு நாள் தான் பார்த்ததாகவும், அதற்குமுன் பார்த்ததில்லை என்றும், அதன்பின் ஒரு நாள் பார்த்ததாகவும், அதனால் தற்போது அவரை நீதிமன்றத்தில் அடையாளம் காட்ட இயலவில்லை என்று சாட்சி கூறுகிறார்.) அப்போது எதிரி பிரபாகரன் என் முன்பாக காவல் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார் அதை காவல் ஆய்வாளர் அதை பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்போது வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய பட்டாகத்தி ஒன்றை எதிரி பிரபாகரன் அடையாளம் காட்டினார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு சம்மந்தமான ஆயுதத்தில் எந்த ஆயுதத்தை எதிரி பிரபாகரன் அடையாளம் காட்டினார் என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. பின்னர் 11.05.2019 ம் தேதி காலை பாலமுருகன் என்பவரை தெற்குவாசல் காவல்நிலையத்தில் என் முன்பாகவும் கிராம நிர்வாக சமயன் முன்பாகவும் போலிசார் விசாரித்தனர். அப்போது பாலமுருகன் ஒப்புதல் கொடுத்தார். அதை காவல் ஆய்வளர் பதிவு செய்தார். அப்போது எத்தனை மணி இருக்கும் என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.05.2019ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் எதிரி மணிமாறன் என்பவர் என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார் அதை ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.05.2019ம் தேதி திரு.நெல்சன் என்பவர் என் முன்பாகவும் கிராம உதவியாளர் முன்பாகவும் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார் அதை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அதில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து

என்னுடையது தான். அது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.05.2019ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் எல்லீஸ் நகர் ஈபி ஆப்பிஸ் போஸ்ட் மரத்திற்கு அருகே 2 கத்தியை மணிமாறன் மற்றும் பாலமுருகன் என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் காவல் துறையினரிடம் அடையாளம் காட்டினர். அதை அவர்கள் அத்தாட்சி தயாரிக்க கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்டுவது தான் அதில் முதலாவது உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 2 ஆயுதங்கள் நீதிமன்றத்தில் உள்ள ஆயுதங்களில் எது என எனக்கு ஞாபகமில்லை. அதன் பிறகு சுமார் 1 மணிநேரம் கழித்து கெனட் மருத்துவமனை பாலத்திற்கு கீழ் 2 இருசக்கர வாகனத்தை 2 நபர்கள் அடையாளம் காட்டினார்கள். அவர்கள் யார் என்று எனக்கு ஞாபகமில்லை. அதன் அடிப்படையில் அத்தாட்சியை தயாரித்து போலிசார் அந்த இரு 2 சக்கர வாகனங்களை கைப்பற்றினார்கள். அது சம்மந்தமான அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அதில் முதலாவது உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் இருசக்கர வாகனங்கள் போட்டோவில் உள்ளது தானா என்று எனக்கு ஞாபகமில்லை. ( சாட்சியிடம் என்ன போட்டோ காண்பிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள அந்த போட்டோக்கள் 5 **நீ.ம.சா.ஆ.1** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது ) 28.05.2019 ம் தேதி தெற்குவாசல் காவல்நிலையத்தில் வைத்து என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் சபா, மணிகண்டன், விவேக் மற்றும் காளிதாஸ் ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். ( அவர்கள் அப்போது மொத்தமாக இருந்ததால் தனக்கு தற்போது அவர்களை அடையாளம் காட்ட இயலவில்லை என சாட்சி கூறுகிறார்.) அந்த சபா, மணிகண்டன், விவேக் மற்றும் காளிதாஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அதில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அவை முறையே

**அ.சா.ஆ.10 முதல் 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.05.2019ம் தேதி காலை நேரம் ஞாபகமில்லை என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் பாண்டிவிஜய் என்பவர் தெற்கு வாசல் காவல்நிலையத்தில் வைத்து காவல் ஆய்வளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அதில் முதலாவது உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று மதியம் நேரம் ஞாபகமில்லை கீரத்துரை ரயில்வே கேட் அருகே 2 கத்திகளை எதிரிகள் அடையாளம் காட்டினார்கள். அவர்கள் பெயர் ஞாபகமில்லை. அவர்கள் அடையாளம் ஞாபகமில்லை. அந்த கத்திகளை அத்தாட்சி தயாரித்து ஆய்வாளர் என் முன்னிலையிலும் கிராம ஆய்வாளர் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். நீதிமன்றத்தில் உள்ள ஆயுதங்களில் அந்த கத்திகள் எவை என்று எனக்கு ஞாபகமில்லை. அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் வில்லாபுரம் பாலத்திற்கு கீழ் 5 கத்திகளை எதிரிகள் அடையாளம் காட்டினர் அவர்கள் பெயர் ஞாபகமில்லை. அவர்கள் யார் என்று அடையாளம் ஞாபகமில்லை. அந்த 5 கத்திகளை அத்தாட்சி தயாரித்து ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அதில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சாஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எந்தெந்த எதிரியிடமிருந்து என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்பது குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றும் மேலும் எதிரிகளை எனக்கு நன்கு அடையாளம் தெரியும் என்றும், எதிரிகளை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் தற்போது எதிரிகள் குறித்தும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட

ஆயுதங்கள் குறித்தும் ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>1, 3, 4, 6, 7, 8, 10 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரிகள் எவரும் என் முன்னிலையிலோ கிராம உதவியாளர் முன்னிலையிலோ ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகள் எவரும் ஆயுதம் எதையும் அடையாளம் காட்டவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து ஆயுதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமான ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகள் இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமான சொத்துகளுக்கும் இந்த வழக்குக்கும் இந்த எதிரிகளுக்கும் சம்மந்தம் எதுவும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>2, 5, 9 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.</u>**

Sd/- சுந்தரபாண்டியன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.10.11 11:33:07 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.